# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

## பன்னாட்டுக் கருத்தரங்கு

### தொகுதி - 3



தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)
மதுரை - 18

Scanned by CamScanner

# பொருளடக்கம்

## காப்பியம்


| வ. எண் | பெயர் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | திருமதி இலக்கியா, சோ. | இரட்சண்ய மனோகரத்தில் அருள் வாழ்வியலுக்கான மனித மதிப்பீடுகள். | 1 |
| 2. | திருமதி சலோமி இராஜரீகம், சே. | தேம்பாவணியில் மனித மதிப்பீடுகள் | 5 |
| 3. | திருமதி பிரியா, பா. | அருள்நிறை மரியம்மை காவியம் காட்டும் மனிதநெறிகள் | 8 |
| 4. | செல்வி மகேஸ்வரி, வே. | இரட்சணிய யாத்திரிகத்தில் மதிப்புகள் | 12 |
| 5. | மணிப்பிரியா, ரா. | நீர் வரம் அடைந்த படலம் வழி அறியலாகும் மதிப்பீடுகள் | 15 |
| 6. | வசுமதி, சி. | தேம்பாவணியில் நீர் வரம் அமைந்த படலம் | 18 |
| 7. | செல்வி விஷ்ணுபிரியா, சு. | சேதையோன் படலத்தில் இறைமாண்புகள் | 22 |
| 8. | ஜாஸ்மின் பிரியா, மா. | வளன் சனித்த படலத்தில் மனித மதிப்பீடுகள் | 27 |


## சிற்றிலக்கியம்


| | | | |
|---|---|---|---|
| 9. | முனைவர் அருள் மைக்கேல் செல்வி, சி. | கித்தேரியம்மாள் அம்மானை வழி அறியலாகும் வாழ்வியல் மதிப்பீடுகள். | 31 |
| 10. | அல்போன்ஸ் சிந்தியா, அ. | கித்தேரியம்மாளின் மனித மாண்புகள் | 35 |
| 11 | ஆனந்தி, க. | திருக்காவலூர் கலம்பகம் சுட்டும் வாழ்வியல் அறம் | 38 |
| 12. | திருமதி சரஸ்வதி, கு.செ. | கிறித்துவச் சிற்றிலக்கியங்கள் | 42 |
| 13. | முனைவர் சுஜா, ச.அ. | திருக்காவலூர் கலம்பகச் சிறப்பு | 46 |
| 14. | திருமதி திவ்யா, பி. | மடுமாதா அம்மானையில் குடும்பத்திற்கான மதிப்பீடுகள் | 50 |
| 15. | முனைவர் தேவ்மாலா, ஆ. | திருக்காவலூர்க் கலம்பகத்தில் அறம் | 53 |
| 16. | முனைவர் ஹென்றி ஜுலியஸ், பெ. | கித்தேரியம்மாள் அம்மானையும் அறவியல் பேருண்மைகளும் | 57 |
| 17. | முனைவர் ஷர்மி, ஆ. | கிறித்துவ இலக்கியத்தில் சமுதாயச் சிந்தனைகள் | 62 |


Scanned by CamScanner

# மடுமாதா அம்மானையில் குடும்பத்திற்கான மதிப்பீடுகள்

பி. திவ்யா
உதவிப் பேராசிரியை, தமிழ்த்துறை (சுயநிதி)
பாத்திமா கல்லூரி, மதுரை

## முன்னுரை

கிறித்தவம் என்பது சமயம் என்பதைத் தாண்டி வாழ்க்கை நெறியாகவே உள்ளது. மனித வாழ்விற்கான நல்ல பல மதிப்பீடுகளை போதிக்கின்றது. அன்பு, சகோதரத்துவம், சமத்துவம் என்பன போன்ற பல மதிப்பீடுகள் அவற்றில் அடங்கும். அந்த மதிப்பீடுகளால் மனிதர்கள் ஒருவர் ஒருவரை நேசிக்க வேண்டும் எனக்கூறும் கிறித்தவம் குடும்ப அமைப்பிற்கு அதிக முக்கியத்துவம் தருகின்றது. குடும்பத்தைக் குட்டித் திருச்சபை எனக் கூறும் கிறித்துவ சமயம் அந்தக் குடும்பத்தில் உள்ள தாய், தந்தை, பிள்ளைகள், சகோதர சகோதரிகள், கணவன், மனைவி என ஒவ்வொருவருக்கான பண்புகளைப் பலவாறு வலியுறுத்துகின்றது. இதனைத் திருவிவிலியத்தில் தெளிவாகக் காணலாம். திருவிவிலியத்தைப்போல இலக்கியங்களிலும் இப்போக்கு மேலோங்கியுள்ளது. 'மடுமாதா அம்மானை' அல்லது 'மருதமடு ஜெபமாலை மாதா அம்மானை' உணர்ந்தும் குடும்பத்திற்கான மதிப்பீடுகள் இவண் தொகுத்துரைக்கப்படுகின்றன.

## இலங்கை மண்ணில் அம்மானை இலக்கியம்

அம்மானை என்பது தமிழக நாட்டுப்புற விளையாட்டு ஆகும். உருண்டையான மூன்று அல்லது நான்கு கற்களைக் கொண்டு பெண்கள் சேர்ந்து விளையாடும் விளையாட்டாகும். அவ்விளையாட்டைப் பெண்கள் விளையாடும் பொழுது பாடல் பாடுவது மரபு. அப்பாடல் வரிகள் அம்மானை என முடியும். ஒரு பெண் மற்ற பெண்ணை (பெண்களை) அம்மா என அழைப்பதே 'அம்மானை' என்று ஆகிற்று. இவ்வாறு நாட்டுப்புற விளையாட்டில் இடம்பெற்ற பாட்டு பெருவழக்காகிப் பின் பெண்பாற்பிள்ளைத்தமிழின் ஒரு கூறாக மாறியது. பின் மேலும் வளர்ச்சியடைந்து தனித்த சிற்றிலக்கிய வகையாக உருவெடுத்தது. இன்று நூற்றுக்கும் மேற்பட்ட சிற்றிலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன. அவற்றில் பெரும்பான்மையானவை கிறித்தவ சமயம் சார்ந்தே படைக்கப்பெற்றுள்ளன.

கிறித்தவ சமயத்தில் உள்ள மனிதர்களின் வாழ்க்கை வரலாற்றை, சிறப்புகளை எடுத்துரைக்க அம்மானை இலக்கிய வகைமை பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் மட்டுமல்ல தமிழ் பிற நாடுகளிலும் அம்மானை இயற்றப்படுகின்றது. குறிப்பாகத் தமிழகத்திற்கு இணையாகத் தமிழுக்கு இலக்கியக் கொடையருளும் இலங்கையில் உள்ள கிறித்தவர்கள் பல அம்மானை இலக்கியங்களைப் படைத்துள்ளனர். அவற்றுள் அர்ச். லூர்து மாதா அம்மானை, அர்ச். அருளானந்தர் அம்மானை, அர்ச். இசிதோர் அம்மானை, அர்ச். செபஸ்தியார் அம்மானை, அர்ச். சவேரியார் அம்மானை, இஸ்நாபக சஞ்சுவாம் அம்மானை, புனித சூசையப்பர் அம்மானை, மடுமாதா அம்மானை முதலியவைக் குறிப்பிடத்தகுந்தவை.

## மடுமாதா அம்மானை

இலங்கைவாழ் தமிழ்க் கிறித்தவர்களால் எழுதப்பட்ட அம்மானைகளில் ஒன்றே மருதமடுத் திருப்பதியில் எழுந்தருளிக்கும் பரிசுத்த செபமாலை மாதாவின் அம்மானை. இது மடுமாதா அம்மானை என்றும் குறிக்கப்படுகின்றது. இதை இயற்றியவர் ம.ஸ்ரீ.கி. மரியாம்பிள்ளை புலவர் ஆவார். இவர் இந்நூல் மட்டுமின்றி, தன் தந்தையால் இயற்றப்பட்டு முடிக்கப் பெறாத 'ஊசோன் பாலந்தை' நாடகத்தை நிறைவு செய்துள்ளார். மேலும், புனித செபஸ்தியார் வசனவாசாப்பு எழுதியுள்ளார். மேலும், சில அம்மானை நூல்களையும் இயற்றியுள்ளார்.

'மருதமடு' என்பது இலங்கையின் வடக்குப் பகுதியில் உள்ள ஊர் ஆகும். இப்பகுதியில் 1823-இல் முதன் முதலில் சிறுகோவில் கட்டப்பட்டது. அங்குள்ள ஒரு செபமாலை மாதா அல்லது மடுமாதா மீது இயற்றப்பட்டதே இந்த மடுமாதா அம்மானை ஆகும். இம்மடுமாதா அம்மானை, நாட்டுச்சிறப்பு, நகரங்களின் சிறப்புடன் தொடங்குகின்றது. பின்னர், அர்ச்சிஷ்ட சுவக்கின் அன்னம்மாளின் திருவிவாக காணிக்கை கொடுத்த காதை, மரியம்மாளின் சுகிந்த ஒழுக்கத்தை திருமணம் முடித்த காதை, ஈறம் பொருத்து காதை, ஐயற்தோற்றி நீங்கிய காதை, எலிசபெத்தம்மாளை மினவுதலும், இரட்சகர்